**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.452/2025**
**வழக்கு சாட்சி PW-9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.சாராபானு | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | முகமது மக்தும் | தொழில் | : | உதவி பேராசிரியர் (அரசு மருத்துவமனை) |
| கிராமம் | : | ஊட்டி | வயது | : | 37 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Thursday of 04.06.2026.

**(1, 2, 4, 5, 7, 8, 9, 11 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி காணொளி மூலம் ஆஜரானார்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது நீலகிரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.06.2016 அன்று இரவு 08.30 மணிக்கு நான் பணியில் இருக்கும் போது, மாரியப்பன் என்ற 32 வயதுடைய ஆண் நபரை அவருடைய நண்பர் பரமசிவன் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த 40 நபர்கள் கட்டை, இரும்பு கம்பி, செங்கல் மற்றும் கையினால் அதே தினம் இரவு 08.00 மணிக்கு புளியங்குடி குத்துஸ் கடை அருகே தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதனை செய்தபோது, அவர்

சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

(1). அவருக்கு வலது தலைப்பகுதியில் 3 x 2.5 x 0.5 cm அளவில் சிதைந்த காயம் காணப்பட்டது.

(2). அவருக்கு முதுகில் வீக்கக்காயம் இருந்தது.

(3). முதுகிலும், 2 கைகளிலும் நகக்கீரல்கள் இருந்தது.

(4). இடது காலில் தொடுவலி இருந்தது.

(5). வலது தோள்பட்டையில் தொடுவலி இருந்தது.

அவருக்கு சீ.டீ.ஸ்கேன் எடுக்கப்பட்டது. அவருக்கு வேறு பிரச்சனை இல்லை. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சையளித்து, அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் எனச் சான்று வழங்கினேன். விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.6 ஆகும். காயம்பட்டவருக்கு ஏற்பட்ட காயங்கள் அவர் சொன்ன நேரத்தில் அவர் சொன்ன மாதிரி தாக்கப்படும் போது ஏற்பட வாய்ப்புள்ளது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

40 பேர்கள் ஒரு நபரை தாக்கும்போது உயிருக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். தொடுவலி பாவனையாக கூட இருக்கலாம் என்றால் சரிதான். கம்பி வைத்து தாக்கும்போது ஆழமான காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். கம்புத்தடங்கள் இல்லை என்றால் சரிதான். மோட்டார் சைக்கிளில் இருந்து கீழே விழும்போது நான் பார்த்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

சாட்சி நீலகிரி மாவட்டம் ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. Roobesh, Computer Operator, முதன்மை மாவட்ட நீதிமன்றம், நீலகிரி என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.16 11:06:00 +0530